இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 23.04.2025

# நேர்வழி தெரியாது!

**பா.ஜ.க.வுக்கு நேர்வழி எப்போதும் தெரியாது. சதிச் செயல்கள், குறுக்குவழிகள், பழிவாங்கும் எண்ணங்கள் ஆகியவையே பா.ஜ.க.வின் பாதைகள். மக்களுக்கு நன்மை செய்து, மக்களின் நம்பிக்கையைப் பெறுவது அவர்களால் முடியாது. தங்களை விமர்சிக்கும் அரசியல் கட்சிகளை தங்கள் கைவசம் இருக்கும் புலனாய்வு அமைப்புகளின் மூலமாக எதிர்கொள்வதே பா.ஜ.க.வின் பழக்க வழக்கம் ஆகும்.**

புலனாய்வு அமைப்புகளின் இந்தச் செயல்பாடுகள் குறித்து உச்ச நீதிமன்றம் பலமுறை கண்டனங்கள் தெரிவித்துள்ளது. ஆனாலும் பா.ஜ.க. திருந்தவில்லை. உச்ச நீதிமன்றத்துக்கே குடியரசுத் துணைத் தலைவர் முதல், பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை சவால் விட்டுக் கொண்டிருக்கும் காட்சியை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

பா.ஜ.க. அரசின் பொருளாதாரக் கொள்கைகள் மீது அதிகமான விமர்சனம் வைத்து வந்த ப.சிதம்பரம் கைது செய்யப்பட்டு நூறு நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டார். மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் பிரமுகரான அபிஷேக் பானர்ஜி, "நாங்கள் கோவா மாநில அரசியலில் எப்போது தலையிடத் தொடங்கினோமோ அது முதல் பத்து முறை என்னிடம் விசாரணை நடத்திவிட்டார்கள்" என்றார்.

குடியுரிமை சட்டத்துக்கு எதிராக போராடியதற்காக அசாம் மாநிலத்தில் அகில் கோகோய் கைது செய்யப்பட்டார். இறுதியாக அவர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். 2002 குஜராத் வன்முறைகள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்த தீஸ்தா செதல்வாட் கைது செய்யப்பட்டார். பீமா கோரேகான் வழக்கில் ஆனந்த் டெல்டும்டே கைது செய்யப்பட்டார்.

சிவசேனா எம்.பி. சஞ்சய் ரௌத் கைது செய்யப்பட்டுள்ளார். அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி எத்தகைய நெருக்கடியைச் சந்தித்தது என்பது இந்தியா அறிந்தது ஆகும். தமிழ்நாட்டிலும் இவர்களது வேலைகளை அதிகம் காட்டி வருகிறார்கள். 'இது போன்ற அச்சுறுத்தல்கள், மிரட்டல்களுக்கு அடிபணியாது தமிழ் மண்' என்ற எச்சரிக்கையை விடுத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**பா.ஜ.க.வின் பாய்ச்சல் இப்போது சோனியா, ராகுல் ஆகியோர் மீது அதிகமாக பாய்ந்து வருகிறது. 'நேஷனல் ஹெரால்டு' என்ற வழக்கில் சோனியா, ராகுல் ஆகியோர் மீது கடந்த 19 ஆம் தேதியன்று டெல்லி சிறப்பு நீதிமன்றத்தில் அமலாக்கத்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. 988 கோடி ரூபாய் முறைகேடு நடந்திருப்பதாகச் சொல்லி டெல்லி, லக்னோ, மும்பை ஆகிய இடங்களில் இருக்கும் 'நேஷனல் ஹெரால்டு' சொத்துக்களை முடக்கி இருக்கின்றார்கள்.**

நேஷனல் ஹெரால்டு பத்திரிகைக்கு எதிராக 2012 ஆம் ஆண்டு சுப்பிரமணிய சுவாமி பேசினார். சோனியாவும், ராகுலும் சேர்ந்து 'நேஷனல் ஹெரால்டு' பத்திரிகையின் சொத்துக்களை அபகரிக்கப் பார்க்கிறார்கள்' என சுவாமி குற்றம் சாட்டினார். இதனை 2014 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. அரசு பிடித்துக் கொண்டது.

இவ்வழக்கில் 2014- ஆம் ஆண்டு ராகுல், சோனியா உட்பட குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் டெல்லி நீதிமன்றம் சம்மன் அனுப்பியது. 2015- ஆம் ஆண்டு இவ்வழக்கில் சோனியா, ராகுல் இருவருக்கும் முன் பிணை வழங்கப்பட்டது. 2019- ஆம் ஆண்டு 'நேஷனல் ஹெரால்டு'க்கு சொந்தமான 16 கோடி ரூபாய் மதிப்புடைய சொத்துகளை பறிமுதல் செய்ததாக அறிவிக்கப்பட்டது.

இது 2025 ஆம் ஆண்டு ஆகும். இந்த வழக்கில் தற்போது அமலாக்கத் துறையினர் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளார்கள். 2014 முதல் 2025 வரையிலான 11 ஆண்டு காலம் காங்கிரஸ் கட்சியை மிரட்டுவதற்காக மட்டுமே 'நேஷனல் ஹெரால்டு' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1938 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேருவால் பிரிட்டிஷ் இந்தியாவில் தொடங்கப்பட்டது 'நேஷனல் ஹெரால்டு' பத்திரிகை. அசோசியேட்டட் ஜர்னல்ஸ் லிமிடெட் (ஏ.ஜே.எல்.) என்ற நிறுவனத்தின் சார்பில் இந்த பத்திரிகை வெளியிடப்பட்டு வந்தது. நேருவின் மிகக் கடுமையான அரசியல் தலையங்கங்கள் காரணமாக 1942 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியால் இப்பத்திரிகை தடை செய்யப்பட்டது. மூன்று ஆண்டுகள் கழித்து மீண்டும் வந்தது. சுதந்திர இந்தியாவில் பிரதமர் ஆன நேரு, அந்தப் பத்திரிகையின் இயக்குநர் குழுவில் இருந்து தனது பொறுப்பை விட்டு விலகினார். ஆனாலும் காங்கிரசு கட்சியின் நிதியின் மூலமாகத்தான் அது செயல்பட்டது. 2008 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. 2016 முதல் இணையப் பதிப்பாக வெளிவந்தது.

2012 ஆம் ஆண்டு சுப்பிரமணிய சுவாமி, "சோனியா, ராகுல் ஆகிய இருவரும் காங்கிரஸ் கட்சி நிதியை பயன்படுத்தி, ஏ.ஜே.எல். நிறுவனத்தை கைப்பற்றி அதன் 2,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்களை அடையும் நோக்கில் செயல்பட்டார்கள்" என்று குற்றம் சாட்டினார். ஆனால் இதன் சொத்துக்களில் இதுவரை எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று காங்கிரஸ் கட்சி விளக்கம் அளித்துள்ளது. இத்தகைய பலவீனமான வழக்கை வைத்துக் கொண்டுதான் காங்கிரஸ் கட்சியை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**"ஜவஹர்லால் நேரு எங்களுக்கு அரசியலை மட்டும் கற்றுத் தரவில்லை. அச்சத்தை எதிர்கொள்ளவும், உண்மையின் பக்கம் நிற்கவும் கற்றுத் தந்தார்" என்று ராகுல் சொல்லி இருக்கிறார். பா.ஜ.க.வின் பலவீனமான தாக்குதல்களை காங்கிரஸ் கட்சி எதிர்கொண்டு முறியடிக்கும் என்பதே ராகுல் அளித்துள்ள பதில் மூலம் அறியும் உண்மையாகும்.**

### என் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டவர்!

# தலைவர் கலைஞரின் சொல்தட்டாத உண்மைத் தொண்டர்!

## முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஏப். 23-**

**முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்களின் பிறந்த நாளையொட்டி, கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், என் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டவர் என்றும் தலைவர் கலைஞரின் சொல்தட்டாத உண்மைத் தொண்டர் என்றும் பாராட்டியுள்ளார்.**

முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தலைவர் கலைஞரின் சொல்தட்டாத உண்மைத் தொண்டருக்கான பண்புநலம்; நெருக்கடி நிலை எதிர்ப்பு சொல்லும் இவர் நெஞ்சுரம்; என் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு துணைநின்ற அன்புக்கரம் அண்ணன் ஆர்க்காட்டார் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்!

உங்களின் பாராட்டுதலாலும், வாழ்த்துகளாலும் ஊக்கம் பெற்று முன்செல்கிறேன்...

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



### மாணவர்கள் விளையாட்டுத்தனமாக விளையாடும் போது ஏற்படும் விபத்துகளை தடுக்க

# பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் அமைப்பதில் முன்னுரிமை அளிக்கப்படும்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!

சென்னை, ஏப்.23-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பள்ளியில் படிக்கும் மாணவர்கள் விளையாட்டுத்தனமாக விளையாட்டாக செய்யும்போது ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க பள்ளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் சுற்றுச்சுவர் அமைக்கப்படும் என்று அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டார்.

இதுகுறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

கள்ளக்குறிச்சி தொகுதி, சின்ன சேலம் ஒன்றியம், தாகம்தீர்த்தாபுரம் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு மையம் அமைக்க அரசு முன் வருமா? என்று உறுப்பினர் மா.செந்தில்குமார் கேட்ட கேள்வியைத் தொடர்ந்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அளித்த பதில்கள் வருமாறு:-



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய உயிர் நண்பரும், திருச்சி மாவட்டத்தைச் சார்ந்தவர் என்கின்ற முறையில், வெறும் நடிகர் திலகத்திற்காக மட்டுமல்ல, நாட்டுப்பற்று மிக்கவராகவும், கனடா நாட்டில் கௌரவ மேயர் பொறுப்பை வகித்தவரும், ஒட்டுமொத்த தமிழகத்திற்கே பெருமைத் தேடித் தந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஐயா அவர்களுடைய சிலையை இருக்கின்ற இடத்திலேயே திறப்பதற்கு சட்டரீதியாக முயற்சி மேற்கொள்வேன் என்று சொன்ன தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஒரு பூங்காவிற்கு அவருடைய பெயரையும், அந்தப் பூங்காவில் அவருடைய சிலை அமைக்கப் படும் என்கிற முயற்சியை எடுப்பேன் என்ற சொன்ன எங்களுடைய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நடிகர் திலகத்தினுடைய ரசிகன் என்கிற முறையிலும், உறவுக்காரன் என்கிற முறையிலும் முதலில் என்னுடைய நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்களுடைய அனுமதியோடு விடையை அளிக்கின்றேன். புதிய தேர்வு மையம் அமைக்க தேவையான நிபந்தனைகளை இப்பள்ளி தற்போது பூர்த்தி செய்யவில்லை.

மேலும், இப்பள்ளிக்கு அருகில் 8 கிலோ மீட்டர் தொலைவில் போதிய உட்கட்டமைப்பு வசதியுடன்கூடிய 3 தேர்வு மையங்கள் செயல்பட்டு வருவதால், இப்பள்ளிக்கு பொதுத் தேர்வு மையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

சட்டமன்ற உறுப்பினர், மாணவர்களின் நலன் சார்ந்து இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். சில வழிமுறைகள் என்று பார்க்கும்போது, குறிப்பாக 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 100 மாணவர்களாவது இருக்க வேண்டும். குறைந்தபட்சம் 10 கிலோ மீட்டர் சுற்றளவில் தேர்வு மையங்கள் இயங்கக்கூடாது. சார்ந்த அரசு மேல்நிலைப் பள்ளியின் அருகில் 8 கிலோ மீட்டர் தொலைவில் போதிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் 3 தேர்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக, அந்தப் பள்ளியில் 54 students மட்டும்தான் இருக்கிறார்கள்.

இந்த ஆண்டு அதனை அதிகப்படுத்துவதற்கு துறை சார்பாக எங்களுடைய முயற்சியை கண்டிப்பாக நாங்கள் எடுப்போம். அப்படி முயற்சி எடுக்கின்றபோது, அது 100 ஆக வரும்போது, குறைந்தபட்சம் 100 மாணவர்கள் இருந்தார்களேயானால், புதிய தேர்வு மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்யப்படும்.

குறிப்பாக, தேர்வு மையம் அமைக்கப்படுகின்றபோது, இருக்கை வசதி எப்படியிருக்கிறது? கழிவறை வசதி எப்படியிருக்கிறது? இடவசதி எப்படி யிருக்கிறது என்பதை எங்களுடைய DEOs. BEOs மூலமாக கருத்துரு பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். கண்டிப்பாக இந்த ஆண்டு 100 மாணவர்களுக்கு மேல் எண்ணிக்கையை நாங்கள் அதிகப்படுத்து கின்றபோது, நீங்கள் சொன்ன இந்தத் தாகம்தீர்த்தாபுரத்தின் தாகத்தை கண்டிப்பாக நாங்கள் தீர்ப்போம்.

சட்டமன்ற உறுப்பினருடைய உண்மையான அந்த concern. இளங்கன்று பயமறியாது என்பது போல சிலநேரங்களில் விளையாட்டுத்தனமாக இருக்கும் போது, விபத்திற்காக ஆகிவிடக் கூடாது என்கிற எண்ணத்தில் அவர் எடுத்ததை சொல்கிறார்.

நம்முடைய அமைச்சர் முத்துசாமி அவர்களுடைய மானியக் கோரிக்கையிலே பேசும்போது சொன்னார்கள். தனியார் பள்ளிகளில் சில compound சுவர் மிக குறைவாக, ஏரி பக்கத்தில் compound சுவர் மிக குறைவாக இருக்கும்போது மாணவச் செல்வங்கள் ஏதாவது வெளியில் சென்று விளையாடும்போது இந்த மாதிரி ஏதாவது விபத்துக்கு உள்ளாகிவிடுகிறது. compound சுவரை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னால் அதுபோன்ற தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் கொடுக்கலாம் என்றுகூட அவர் சொல்லியிருக்கிறார்.

அது தனியார் பள்ளிகளுக்கு மட்டுமல்ல. அரசுப் பள்ளியை சார்ந்திருக்கிற நாங்களும் அதை கண்டிப்பாக, மிக sensitive ஆன விஷயம் அது. கண்டிப்பாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோல அது மாதிரி இருக்கின்ற பள்ளிக்கூடங்கள் எது எதுவென்று நாங்கள் கண்டறிந்து ஏரிப்பக்கத்தில் இருந்தாலும் சரி அல்லது railway track பக்கத்தில் இருந்தாலும் சரி உடனடியாக நாங்கள் கவனத்தில்கொள்வோம். கட்டமைப்பு என்று வரும்போது நம்முடைய தொகுதியில் மட்டும் பார்த்தீர்களென்றால் கிட்டத்தட்ட 155 classrooms, 13 labs and toilet units, நான்கு, நான்கு units கட்டியிருக்கிறோம் நம்ம தொகுதியைப் பொறுத்தவரைக்கும்.

அதில் சுற்றுச்சுவர் என்று வரும்போது, இந்த ஆண்டு காலம் ஒதுக்கப்பட்டிருக்கிற 1,000 கோடி ரூபாயிலிருந்து first preference ஆக நாங்கள் உங்களுக்கு கொடுக்கிறோம். 'Prevention is better than cure' மாதிரி ஒரு தவறு நடப்பதற்கு முன்பாக அதை தடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம்.

கண்டிப்பாக இந்த ஆண்டே அதை செய்து தருவதற்கான எல்லா முயற்சியும் எற்படும் என்பதை சட்டமன்ற உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலளித்தார்.



திருவாரூர் தொகுதிக்குட்பட்ட கொரடாச்சேரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தமிழ்நாடு அரசின் தொழில் முதலீடு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, பெற்றோர் – ஆசிரியர் சங்கத் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே.கலைவாணன், வை.செல்வராஜ் எம்.பி. உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர். விழாவில் தலைமை ஆசிரியர் பூந்தமிழ் பாவை, ஒன்றியக் குழு முன்னாள் துணைத் தலைவர் ஆர்.பாலச்சந்திரன் மற்றும் பலர் பங்கேற்றனர்.